

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.7.2024) தலைமைச் செயலகத்தில், ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரத்தின் துணை ஆளுநர் யாமாகுஜி நோபிஹிகோ (Thiru. Yamaguchi Nobuhiko) அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஒசாகா நகரத்தின் செயல் இயக்குநர் (வளர்ச்சித் தொழில்) ஶ்ரீநிச்சி மேய்தா (Thiru. Srinichi Maeda), சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டு துணைத் தூதர் டக்காஹாஷி முனியோ (Thiru. Takahashi Muneo) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.7.2024) முகாம் அலுவலகத்தில், பேராசிரியர் அவர்களின் மகன் அ.அன்புச்செல்வன் மற்றும் பேரனும், சட்டமன்ற உறுப்பினருமான அ. வெற்றியழகன் ஆகியோர் சந்தித்து, திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி நாடாளுமன்றத் தேர்தலிலும், விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலிலும் தொடர் வெற்றி பெற்றதையொட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்.

### சென்னை மெட்ரோ ரயில் 2-ம் கட்ட திட்டம்:

# ஒன்றிய அரசு இதுவரை ஒரு பைசா கூட நிதி ஒதுக்கவில்லை!

## மக்களவையில் கழக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜூலை 23-

சென்னை மெட்ரோ ரயில் 2-ம் கட்ட திட்டத்திற்கு ஒன்றிய அரசு கடந்த 5 ஆண்டுகளாக ஒரு பைசா கூட நிதி வழங்கவில்லை என்று மக்களவையில் தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு குற்றஞ்சாட்டினார். கூட்டாட்சி அடிப்படையில்தான் ஒன்றிய அரசு இயங்குகிறதா என்றும் டி.ஆர்.பாலு கேள்வி எழுப்பினார்.



மக்களவையில் இது தொடர்பாக பேசிய கழக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, சென்னையில் மெட்ரோ ரயில் 2-ம் கட்ட திட்டத்தில் 60 சதவீத பணிகள் நிறைவேறிய நிலையில் கூட, ஒன்றிய அரசு இதுவரை நிதி ஒதுக்கவில்லை என்று கூறினார். வெளிச்சந்தையில் இருந்து கூடுதல் வட்டிக்கு கடன் வாங்கி தமிழ்நாடு அரசு மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது என்று டி.ஆர்.பாலு தெரிவித்தார்.

ஆனால், கடந்த 5 ஆண்டுகளாக ஒன்றிய அரசு ஒரு பைசா கூட நிதி வழங்கவில்லை என்று அவர் குற்றஞ்சாட்டினார். ஒன்றிய அரசின் செயல்பாடுகளைப் பார்த்தால், நாம் இந்திய ஒன்றியத்தில்தான் இருக்கிறோமா என்ற சந்தேகம் எழுகிறது என்றும் மக்களவை திமுக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு விமர்சித்தார்.

### 'சமூக நீதிக்கான உலகின் முதல் ஓ.டி.டி.' தளமாக – லிபர்ட்டி கிரியேஷன்ஸ் சார்பில்

# 'பெரியார் விஷன்' ஓ.டி.டி. தளம்! கி.வீரமணி திறந்து வைத்தார்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. - நடிகர் சத்தியராஜ் - ஞான.ராஜசேகரன் - ஓவியர் டிராட்ஸ்கி மருது பங்கேற்பு!

சென்னை, ஜூலை 23-

'சமூக நீதிக்கான உலகின் முதல் ஓ.டி.டி.' தளமாக லிபர்ட்டி கிரியேஷன்ஸ் சார்பில் 'பெரியார் விஷன்' ஓ.டி.டி. தளம் தொடக்க விழா நேற்று முன்தினம் (21.7.2024) காலை சென்னை பெரியார் திடலில் எம்.ஆர். இராதா மன்றத்தில் நடைபெற்றது. 'பெரியார் விஷன்' ஓ.டி.டி. தளம் நேர்காணல் பதிவு அலுவலகத்தை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் திறந்துவைத்தார்.

தி.மு.க. துணை ப்பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, நடிகர் சத்யராஜ், பெரியார் திரைப்பட இயக்குநர் ஞான.ராஜசேகரன் அய். ஏ. எஸ்., மற்றும் ஓவியர் டிராட்ஸ்கி ஆகியோர் மருது திறப்பு விழாவில் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து நடிகவேள் எம்.ஆர்.ராதா மன்றத்தில் நடைபெற்ற 'பெரியார் விஷன்' ஓ.டி.டி. தளம் தொடக்க விழாவில் லிபர்ட்டி கிரியேஷன்ஸ் இயக்குநர் வீ.அன்புராஜ் அனைவரையும் வரவேற்றார்.

லிபர்ட்டி கிரியேஷன்ஸ் பெரியார் திரைப்படம், புரட்சிக்காரன் திரைப்படத்தை எடுத்து மக்களிடையே பகுத்தறிவுக் கருத்துகளை கொண்டு சேர்த்தது. இங்கே பத்திரிகைத்துறையில் முதலில் இ-பேப்பர் அறிமுகப்படுத்தியது விடுதலை நாளிதழ் தான். கொரோனா காலத்திலும் சூம் கூட்டங்கள் நடத்தியவர் தமிழர் தலைவர் ஆசிரியர். பெரியார் வெப் விஷன் அடுத்த தளம்தான் இந்த பெரியார் விஷன் ஓடிடி. ஸ்டிரீமிங் எளிதாக இருக்கும். யு டியுப் கட்டுப்பாடுகள் கடந்து இருக்கும். தந்தை பெரியார் கருத்துகளுடன் டெலி சீரியல்கள் ஒளிபரப்பாகும். பெரியார் திடலுக்கு கண்டெண்ட் அளிப்பதில் பஞ்சமில்லை. மற்றவர்களுக்கு கண்டெண்ட் கொடுப்பவர்கள் நாம். ஓடிடி உருவாக்கத்தில் பிரின்சு என்னாரெசு பெரியார், வசந்த், மதிசீலன் ஆகியோரின் கடும் முயற்சி பாராட்டத்தக்கது.

நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி தூத்துக்குடியில் 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். அவருக்கு இந்த நேரத்தில் வாழ்த்துகள். இனமுரசு சத்யராஜ், இயக்குநர் ஞான. ராஜசேகரன், ஓவியர் டிராட்ஸ்கி மருது உள்ளிட்ட அனைவரையும் வரவேற்கிறோம்.

இவ்வாறு வரவேற்புரையில் வீ.அன்புராஜ் குறிப்பிட்டார்.

### காணொலி திரையிடல்

பெரியார் விஷன் தொடக்க விழாவையொட்டி காணொலி திரையிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தி.மு.க. துணைப்பொது ச்செயலாளர் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் 'பெரியார் விஷன்' ஓ.டி.டி. (PERIYAR VISION OTT) தளத்தை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 'பெரியார் விஷன்' ஓ.டி.டி. வாழ்த்துச் செய்தி காட்சிப்பதிவு திரையிடப்பட்டது.

தி.மு.க. துணை ப்பொதுச்செயலாளர் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, நடிகர் சத்யராஜ், பெரியார் திரைப்பட இயக்குநர் ஞான. ராஜசேகரன் அய்.ஏ.எஸ்., மற்றும் ஓவியர் டிராட்ஸ்கி மருது ஆகியோருக்கு திராவிடர் கழகத் தலைவர் அவர்கள் பொன்னாடை அணிவித்து இயக்க வெளியீடுகளை வழங்கி சிறப்பு செய்தார்.

'பெரியார் விஷன்' ஓடிடி அறிமுக விழாவில், ஓவியர் டிராட்ஸ்கி மருது, இயக்குநர் ஞான. ராஜசேகரன் அய்.ஏ.எஸ்., பிரச்சாரச்செயலா ளர் வழக்குரைஞர் அ. அருள்மொழி, பொருளாளர் வீ.குமரேசன் ஆகியோர் உரை ஆற்றினார்கள்.

கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் முன்னிலை உரையாற்றினார்.

நடிகர் சத்யராஜ், தி.மு.க. துணைப்பொதுச்செயலாளர் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரையைத் தொடர்ந்து, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விழா நிறைவு சிறப்புரை ஆற்றினார்.

பகுத்தறிவையும், மக்களுக்குப் பயன்படும் அறிவியல் தொழில்நுட்பத்தையும் வெகுவாகப் பயன்படுத்தவும், புதுமைகளை வரவேற்று பரப்பவும் செய்வார் தந்தை பெரியார்.

இக்காலத்தில் சிறியவர் முதல் பெரியோர் வரை பெருமளவில் அனைவராலும் பயன்படுத்தப்படக் கூடிய ஓ.டி.டி. தொழில்நுட்பத்தைத் துணைக் கொண்டு "Periyar Vision" எனும் பெயரில் 'சமூகநீதிக்கான உலகின் முதல் ஓ.டி.டி'யை லிபர்டி கிரியேஷன்ஸ் நிறுவனம் இன்று தொடங்கியுள்ளது.

ஒரு கொள்கைக்காகத் தொடங்கப்படும் உலகின் முதல் ஓ.டி.டி.யாக இதுவே ஆகும். இதில் உரையாடல்கள், உரைவீச்சுகள், நேர்காணல்கள், ஆவணப்படங்கள், குறும்படங்கள், வலைத்தொடர்கள், வகுப்புகள் ஆகியன இடம்பெற இருக்கின்றன. ஒலி, ஒளிப் புத்தகங்கள், இசை ஆக்கங்கள் என பல வடிவங்களிலும் பகுத்தறிவு, சமூகநீதி, பெண்ணுரிமை, ஜாதி ஒழிப்பு, அறிவியல் மனப்பான்மை ஆகியவற்றை முன்னிறுத்திய படைப்புகள் திரையிடப்படுகின்றன.

பெரியார் திரைப்படத்தைத் தயாரித்த லிபர்ட்டி கிரியேஷன்ஸ் நிறுவனம் "Periyar Vision" ஓடிடியை உருவாக்கி வெளியிட்டுள்ளது.

இது ஆண்டிராய்டு தொலைக்காட்சிகளிலும், ஆப்பிள் மற்றும் ஆண்டிராய்டு செல்பேசிகளிலும் கண்டு பயன்பெற முடியும்.

'பெரியார் விஷன்' ஓடிடி அறிமுக விழாவையொட்டி, ஆண்டுக்கட்டணம் ரூ.588 உடன் இரண்டு ஆண்டுகள் கட்டணச் சலுகையும், காலாண்டுக் கட்டணம் ரூ.147 உடன் இரண்டு காலாண்டுகள் கட்டணச் சலுகையும், மாதக்கட்டணம் ரூ.49 உடன் இரண்டு மாதங்களுக்கான கட்டணச் சலுகையும் 31.7.2024 வரை அளிக்கப்படுகிறது.

'பெரியார் விஷன்' ஓ.டி.டி. தளத்துக்கான ஆண்டுக் கட்டணத்தை மோகனா வீரமணி அவர்கள் 'பெரியார் விஷன்' ஓ.டி.டி. பொறுப்பாளர் மதிசீலனிடம் வழங்கினார்.

விழா நிறைவில் 'பெரியார் விஷன்' ஓ.டி.டி. சார்பில் மதிசீலன் நன்றி கூறினார்.



'சமூகநீதிக்கான உலகின் முதல் ஓ.டி.டி' தளமாக லிபர்ட்டி கிரியேஷன்ஸ் சார்பில் 'பெரியார் விஷன்' ஓ.டி.டி. தளம் தொடக்க விழா நேற்று முன்தினம் (21.7.2024) காலை சென்னை பெரியார் திடலில் எம்.ஆர். இராதா மன்றத்தில் நடைபெற்றது. 'பெரியார் விஷன்' ஓ.டி.டி. தளம் நேர்காணல் பதிவு அலுவலகத்தை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் திறந்துவைத்தார். தி.மு.க. துணைப்பொதுச்செயலாளர் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, நடிகர் சத்யராஜ், பெரியார் திரைப்பட இயக்குநர் ஞான.ராஜசேகரன் அய்.ஏ.எஸ்., மற்றும் ஓவியர் டிராட்ஸ்கி மருது திறப்பு விழாவில் கலந்துகொண்டனர். அதனைத் தொடர்ந்து நடிகவேள் எம்.ஆர்.ராதா மன்றத்தில் நடைபெற்ற 'பெரியார் விஷன்' ஓ.டி.டி. தளம் தொடக்க விழாவில் லிபர்ட்டி கிரியேஷன்ஸ் இயக்குநர் வீ.அன்புராஜ் அனைவரையும் வரவேற்றார்.

### 7.5% உள்ஒதுக்கீட்டில் சிறப்புப் பிரிவினருக்கு ஆன்லைன் மூலம்

# பொறியியல் படிப்பிற்கான கலந்தாய்வு! அமைச்சர் க. பொன்முடி தொடங்கி வைத்தார்!

## 29ம் தேதி முதல் பொதுப்பிரிவினருக்கு கலந்தாய்வு!

சென்னை, ஜூலை 23-

தமிழ்நாட்டில், பொறியியல் படிப்புகளுக்கான கலந்தாய்வு தொடங்கியது. முதல்நாளான நேற்று 7.5% உள்ஒதுக்கீட்டில் சிறப்புப் பிரிவினருக்கு கலந்தாய்வு ஆன்லைன் மூலம் நடைபெற்றது.

பொறியியல் படிப்புகளுக்கான விண்ணப்பப் பதிவு கடந்த மே 15 முதல் ஜூன் 9ஆம் தேதி வரை நடைபெற்றது. மாணவர் சேர்க்கைக்கான தரவரிசைப் பட்டியல் கடந்த மாதம் 26ஆம் தேதி வெளியிடப்பட்டது. இந்நிலையில், தமிழ்நாட்டில், பொறியியல் படிப்புகளுக்கான கலந்தாய்வு நேற்று தொடங்கியது.



முதல்நாளான நேற்று 7.5 சதவீத உள்ஒதுக்கீட்டில் சிறப்புப்பிரிவினருக்கு கலந்தாய்வு ஆன்லைன் மூலம் நடைபெற்றது. இந்தப் பிரிவில் அரசு பள்ளி மாணவர்கள் 36 ஆயிரம் பேர் விண்ணப்பித்து உள்ளனர். செப்டம்பர் 11ம் தேதி வரை பொறியியல் படிப்பு கலந்தாய்வு நடைபெறும் நிலையில், வரும் 29ம் தேதி முதல் பொதுப்பிரிவினருக்கான கலந்தாய்வு நடைபெறுகிறது.

சென்னை கிண்டி தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் கலந்தாய்வை தொடங்கி வைத்து பேசிய உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி, சிறப்பு பிரிவில் மாற்றுத்திறனாளி மாணவர்கள் 664 பேர் விண்ணபித்துள்ளதாகவும், 7.5 சதவீத இடஒதுக்கீட்டின் கீழ் இடம் கிடைக்காத மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு மற்றப்பிரிவுகளில் பங்கேற்கலாம் எனத் தெரிவித்தார்.

நடப்பாண்டு பொறியியல் படிப்பில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகக் குறிப்பிட்ட அமைச்சர் பொன்முடி, அடுத்த ஆண்டு முதல் விளையாட்டு பிரிவு மாணவர்களுக்கு 2 சதவீத இடங்கள் ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினார்.

### வேலூர் கோட்டை வளாக பூங்கா மைதானத்தை

# அரசு மற்றும் பொது நிகழ்ச்சிகள் - கூட்டங்களுக்கு பயன்படுத்த அனுமதிப்பீர்!

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 23-

நாடாளுமன்ற மக்களவையில் நேற்று ஜீரோ நேரத்தின் போது வேலூர் கோட்டை வளாக பூங்கா/ மைதானத்தை அரசு மற்றும் பொது நிகழ்ச்சிகள்/ கூட்டங்களுக்கு பயன்படுத்த அனுமதிக்குமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தி தி.மு.க.வைச் சேர்ந்த வேலூர் மக்களவை உறுப்பினர் டி.எம். கதிர்ஆனந்த் பேசியதாவது:-

வேலூர் நாடாளுமன்ற மக்களவைத் தொகுதி உறுப்பினர் என்கிற முறையில் - வேலூர் கோட்டை வளாகப்பூங்கா/ மைதானத்தை அரசு மற்றும் பொது நிகழ்ச்சிகள்/ கூட்டங்களுக்குப் பயன்படுத்த அனுமதி வழங்குவது குறித்து இப்பேரவையின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

வேலூர் கோட்டை வளாகம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அற்புதமான பழங்கால நினைவுச் சின்னமாகும். இந்தியாவின் முதல் சுதந்திரப் போரின் மிக முக்கியமான நிகழ்வான வேலூர் சிப்பாய் கலகம் இதே வேலூர் கோட்டையில்தான் அரங்கேறியது.

கோட்டை வளாகத்தில் உள்ள பூங்கா மைதானம் மகாத்மாகாந்தி -ஜவஹர்லால் நேரு ஆகியோரின் உரைகளுக்கு சாட்சியாக உள்ளது மற்றும் சுதந்திர இயக்கத்தின் போது பல முக்கிய அரசியல் முடிவுகள் இதே கோட்டை வளாகத்தில் இங்கேதான் முடிவு செய்யப்பட்டன. திராவிட இயக்கத் தலைவர் தந்தை பெரியார் - .தி.மு.க.நிறுவனரும்- தலைவருமான பேரறிஞர் அண்ணா - முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் இந்த இடத்தில் பல வரலாற்றுச் சிறப்புமிக்க உரைகளை ஆற்றியுள்ளனர். வேலூர் கோட்டை பூங்கா மைதானம் வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாக மக்கள் மனதில் இடம் பிடித்துள்ளது.

இந்த இடத்தில் நடைபெறும் எந்த ஒரு பொதுக் கூட்டமும்- விழாவும் மக்களின் இதயத்திற்கு மிகவும் நெருக்கமானதாக கருதப்படுகிறது.



தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இதே கோட்டை மைதானத்தில் பலமுறை உரையாற்றியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி 10 ஏப்ரல் 2024 அன்று இதே இடத்தில் தனது தேர்தல் பிரச்சார உரையை ஆற்றினார்.

துரதிர்ஷ்டவசமாக - இந்திய தொல்லியல்துறை- வேலூர் கோட்டையின் பூங்கா மைதானத்தை சமீபகாலமாக பொதுக்கூட்டங்களுக்கு அனுமதிப்பதில்லை - இருப்பினும் பூங்காவிற்கு பொதுமக்கள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் அதே இடத்தில் தனியார் நிறுவனங்களின் வணிகப் பொருட்காட்சிகள் /சந்தை அனுமதிக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இது வரலாற்றுச் சிறப்புமிக்க வேலூர் நகர மக்களின் உணர்வுகளைக் குலைக்கிறது.

எனவே எனது வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் பொதுமக்களின் ஆசை- தேவை நம்பிக்கையை உயர்த்தும் வகையில் எப்போதும் போல வேலூர் கோட்டை-பூங்கா மைதானத்தில் பொதுக்கூட்டங்களை நடத்துவதற்கு இந்தியத் தொல்லியல்துறையின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஒன்றிய அரசு உடனடியாக உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கதிர்ஆனந்த் எம்.பி. பேசினார்.



வேளாண்துறை சம்பந்தமாக அரசு முறைப் பயணமாக ஆஸ்திரேலியா சென்றுள்ள அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மெல்போர்ன் மாகாணத்துக்குச் சென்றார். வேளாண்மை – உழவர் நலத்துறை அரசு செயலாளர் மற்றும் வேளாண்மை உற்பத்தி ஆணையர் அபூர்வா உடன் இருந்தனர்.



சென்னை, நடேசன் கூட்டுறவு தொழிற்பயிற்சி நிறுவனத்தில் நேற்று (22.07.2024) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன் அரசுத் துறைகளை சார்ந்த 50 அலுவலர்களுக்கு 3 நாட்கள் பாலின சமத்துவ வரவு செலவு திட்டப் பயிற்சியை துவக்கிவைத்து, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் செயல்படுத்தப்படும் சட்டங்கள் மற்றும் திட்டங்கள் தொடர்பான அனைத்து விபரங்கள் அடங்கிய கையேட்டினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் அரசுச் செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நல ஆணையர் திருமதி வே. அமுதவல்லி மற்றும் நடேசன் கூட்டுறவு தொழிற் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் ஜி. சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.